முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1448

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.09.2023**, சனிக்கிழமை

1. பிரம்மமே மகா சூட்சுமமே
பிரணவ சக்திமிகு எந்தன் ஆறுமுக அரங்கனே
சரணவச் சுடரேற்றி உலகோர்க்கு
சகலதுமாய் சர்வபலம் தருகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும்
வரமென ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் சோபகிருது வேங்கை திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 30ம் நாள், 16.09.2023, சனிக்கிழமை)
3. தன்னிலே அரங்கனின் பலம்
தனிப்பெரும் ஆற்றலாக உயர்ந்துவர
மண்ணுலகில் அரங்கன் தொண்டர்படை
மகத்துவம்பட சேவையாற்றி உலகைமாற்றும்
4. மாற்றம் தரவல்ல ஒரே மார்க்கம் அரங்கனின் சன்மார்க்கமே
மக்களை காக்கவல்ல மாதர்மம் அரங்கனின் அன்னதானமே
தர்மவழி உலகோர் தொடர்ந்தால் போதும்
தரணிக்கு மாற்றம் சடுதி காணும்
5. கர்மவினை போக்கி உலகோரெல்லாம்
கலியில் அரங்கன் தொண்டர்களாக மாறிவர
வருகவே அனைவருக்கும் ஞானியாகும்
வல்லமைகூடி ஆறுமுகனென் அருளாலே
6. பெருமைபட இந்த பேருலகம் பாதுகாப்பை காணும்
பிரளயமின்றி மக்களுக்கு சர்வபாதுகாப்பும்
பிரணவக்குடிலின் சக்தி மூலமாக கிட்டி இனிதே
சரவணஜோதி வழி சகலருக்கும் ஞானம் சித்திக்கும் சர்வபலம்தரும் ஒரே ஞானி அரங்கனே

7. அரங்கனின் திருவடி பற்றி
அகிலத்தார் ஞானம் பயின்றால்போதும்
வரமாக அவர்களுக்கு எல்லா வாழ்வும்
வையகத்தில் வல்லமைபட ஞானவாழ்வாக சிறந்து உயர்வுகாணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–